தமிழ்நாடு அரசு

# கால்நடை பராமரிப்புத்துறை

செங்கல்பட்டு மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையில் கீழ்க்காணும் பதவிகளுக்கு தகுதியுள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எண். | பதவியின் பெயர் | காலி பணியிடங்களின் எண்ணிக்கை 01.07.2019 அன்றுள்ளபடி | கல்வி மற்றும் பிற தகுதிகள் | ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | அலுவலக உதவியாளர் | 3 (GT, SC, MBC & DC) | 8ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் மிதிவண்டி ஓட்ட தெரிந்திருக்க வேண்டும் | Level-1 Rs.15700-50000/- |

1. விண்ணப்பதாரர் தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் வசிப்பதற்கான ஆதாரத்தின் நகலை இணைத்திட வேண்டும்.(ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை இவற்றில் ஏதேனும் ஒன்று)
2. காலிப்பணியிடங்கள் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற விதவைகள் மாற்றுத் திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்கள் ஆகியோரின் விகிதாச்சாரத்தை உள்ளடக்கியதாகும்.
3. மேற்கண்ட பதவிக்கு விண்ணப்பதாரரின் குறைந்தபட்ச வயது 18 ஆகும். அதிகபட்ச வயது அருந்ததியர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியின வகுப்பினர்களுக்கு 35 ஆகும். மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர்(முஸ்லீம்) 32 ஆகும். பொதுப்பிரிவினருக்கு 30 ஆகும்.(01.07.2019 அன்றுள்ளபடி)
4. விண்ணப்பங்களை காஞ்சிபுரம், செங்கல்பட்டு, மதுராந்தகம் மற்றும் சிட்லபாக்கம் கால்நடை பராமரிப்புத்துறை, உதவி இயக்குநர் அலுவலகத்தில் இலவசமாக நேரில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது விண்ணப்பங்களை **kancheepuram.nic.in** என்ற இணையதள முகவரியில் கட்டணமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் சுயவிலாசமிட்ட ரூ.5/—க்கான அஞ்சல்வில்லை ஒட்டிய உறையுடன் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.
5. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, ஆஸ்பிட்டல் ரோடு, காஞ்சிபுரம் 631 502 என்ற முகவரிக்கு 10.02.2020 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பிட வேண்டும் அல்லது நேரில் ஒப்படைக்க வேண்டும்.
6. விண்ணப்பிக்கும் பதவியின் பெயரினை மேல் உறையின்மீது பெரிய எழுத்துக்களில் தவறாது குறிப்பிட வேண்டும்.
7. **விண்ணப்பதாரர் சுயவிலாசமிட்ட ரூ.5/—க்கான அஞ்சல்வில்லை ஒட்டிய உறையினை விண்ணப்பத்துடன் அனுப்பிட வேண்டும்.**
8. மேற்கண்ட பதவிக்கு நேர்காணல் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்படும். நேர்முக தேர்வினை எந்த நிலையிலும் நிறுத்துவதற்கு / ரத்து செய்வதற்கும் மாவட்ட ஆட்சியருக்கு முழு அதிகாரம் உண்டு.
9. மேல்குறிப்பிட்ட பதவிக்கு, மாற்றுதிறனாளிகளுக்க்கு உச்ச வயது வரம்பில் 10 வருடம் கூடுதலாக வழங்கப்படும்.
10. ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி கல்லூரி படிப்பிற்கு குறைந்ததாக இருந்தால் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் அல்லது பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த ஒரு விண்ணப்பதாரர் மற்றும் ஆதரவற்ற விதவைகள் எந்த சாதியை சார்ந்தவராக இருப்பினும் குறைந்த அளவு பொதுக் கல்வியை காட்டிலும், மேற்பட்ட பொதுக்கல்வித் தகுதியை பெற்றவராய் இருந்து அல்லது கல்லூரிப் படிப்பு பட்டம் பெற்றிருந்து நியமிக்கப்படுவதற்கு மற்றபடி தகுதி உடையவராய் இருந்தால் நியமிக்கப்படுவதற்காக வயதுவரம்பு ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அந்த வயது அவருக்கு பொருந்தாது.

மண்டல இணை இயக்குநர்(கூ/பொ),
கால்நடை பராமரிப்புத்துறை,
காஞ்சிபுரம்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
செங்கல்பட்டு.

தமிழ்நாடு அரசு

கால்நடை பராமரிப்புத் துறை – செங்கல்பட்டு மாவட்டம்

அலுவலக உதவியாளர் பதவிக்கான விண்ணப்ப படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1 | அ) விண்ணப்பதாரரின் பெயர்<br>(தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்) | | கடவுச்சீட்டு அளவு<br>புகைப்படம் |
| | ஆ) பாலினம் | ஆண்/பெண்/திருநங்கை | |
| 2 | தந்தை பெயர் / கணவர் பெயர் | | |
| 3 | நிலையான முகவரி<br>(அஞ்சலக குறியீட்டு எண்ணுடன்) | | |
| 4 | சொந்த மாவட்டம் | | |
| 5 | அ) தொலைபேசி எண்<br><br>ஆ) கைபேசி எண்<br><br>இ) மின்னஞ்சல் முகவரி | | |
| 6 | அ) பிறந்த தேதி<br>ஆ) வயது (01.07.2019 அன்றுள்ளபடி) | | |
| 7 | அ) அரசு பணிகளில் சேர முன்னுரிமை பெற்றவரா | ஆம் / இல்லை | |
| | ஆ) ஆம் எனில் எந்த வகையான முன்னுரிமை ? (ஆதாரமாக சான்றின் நகல் இணைக்கப்பட வேண்டும்) | கணவனால் கைவிடப்பட்டவர் | |
| | | ஆதரவற்ற விதவை | |
| | | மாற்றுத் திறனாளி<br>(இயலாமையின் சதவீதத்திற்கு ஆதாரமாக சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| | | கலப்பு திருமண தம்பதி | |
| | | முன்னாள் இராணுவத்தினர் | |
| | | பிற முன்னுரிமை உள்ளவர்<br>(முன்னுரிமையினை தவறாமல் குறிப்பிட வேண்டும்) | |
| 8 | கல்வித் தகுதி மற்றும் பிற தகுதிகள் | | |

| | | | |
|---|---|---|---|
| 9 | அ) மதம் | இந்து/இஸ்லாம்/கிறிஸ்துவம்/ பௌத்தம்/பிற | |
| | ஆ) வகுப்பு / உட்பிரிவு சாதி | வகுப்பு | உட்பிரிவு சாதி |
| | | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (அருந்ததியர்) | |
| | | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | |
| | | பழங்குடியினர் | |
| | | மிகவும் பிற்பட்ட வகுப்பினர் | |
| | | பிற்பட்ட வகுப்பினர் | |
| | | பிற்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) | |
| | | பொதுப் பிரிவினர் | |
| 10 | அ) விண்ணப்பதாரர் மீது குற்றவியல் வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளதா ? | ஆம் / இல்லை | |
| | ஆ) ஆம் எனில் விவரங்கள் தரவும் | | |
| 11 | அ) விண்ணப்பதாரர் குற்ற வழக்கில் (Criminal Case) ஏதேனும் தண்டனை பெற்றவரா | ஆம் / இல்லை | |
| | ஆ) ஆம் எனில் விவரங்கள் தரவும் | | |
| 12 | சான்றுகள் | அ) கல்விச் சான்று | |
| | | ஆ) சாதிச் சான்று நகல் | |
| | | இ) முன்னுரிமை சான்று நகல் (பொருந்தும் நேர்வில்) | |
| | | ஈ) மாற்றுத் திறனாளி சான்று நகல் | |
| | <u>உறுதி மொழி</u><br>மேற்குறிப்பிட்டுள்ள என்னால் வழங்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சரியானவைகள் எனவும் இதனில் ஏதேனும் தவறு என பின்னர் தெரிய வந்தால் அதற்காக எடுக்கப்படும் எல்லா வகையான நடவடிக்கைக்கும் நான் உட்படுவேன் என உறுதி அளிக்கிறேன்.<br><br>விண்ணப்பதாரர் கையொப்பம்<br><br>நாள். | | |

குறிப்பு– பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, செங்கல்பட்டு மாவட்டம் (இ) காஞ்சிபுரம் என்ற முகவரிக்கு அறிவிக்கையில் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் தபால் மூலமாகவோ அல்லது நேரிலேயோ ஒப்படைக்கப்படவேண்டும் .